சென்னையிலிருந்து காரைக்குடிக்கு துரித இரயில் வண்டி விடும் திட்டம்.

*வினா எண்—784 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து மாயூரம் திருவாரூர் வழியாக காரைக் குடிக்கு எக்ஸ்பிரஸ் இரயில் வண்டி விட் இரயில்வேத் துறைக்கு அரசு பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

மாயூரத்திலிருந்து சென்னைக்கு மேலும் ஒரு விரைவுப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 785—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து சென்னைக்கு மேலும் ஒரு இரவு நேர விரைவுப் பேருந்து விட வேண்டும் எனும் கோரிக்கை வந்துள்ளதா

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

சேலம்—கன்னியாகுமரி விரைவு பேருந்துப் பணி.

*வினா எண். 786—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும்விரைவு பேருந்து (இரவு 9 மணி சுமாருக்கு) பெருந்துறையில் நிற்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

சேலம்—கன்னியாகுமரி துரிதப் பேருந்து தற்போது பெருந்துறை வழியாக இயக்கப்படவில்லை. எனவே, இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பெருந்துறை ஒரு தாலுகாவின் தலைநகர். அது மட்டுமல்ல. அங்கிருந்து அதிகமாக பயணிகள் வெளி ஊர்களுக்கு செல்லவேண்டியிருக்கிறது ஆனால் பஸ் வசதி இல்லை. ஆகவே, புதிதாக சேலத்திலிருந்து பெருந்துறை வழியாக பேருந்து விடுவதற்கும், அந்த பேருந்து பெருந்துறையில் நின்று செல்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நான் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்தவன். பெருந்துறை என்னுடைய ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைவிட எனக்கு அந்த ஊரைப்பற்றி அதிகமாகத் தெரியும், பழக்கம் இருக்கிறது. அந்த இடத்தில் எல்லா பேருந்துகளும் நின்று செல்கின்றன. ஆனால் சேலத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும் பேருந்து இப்போது அந்த வழியாக வரவில்லை. ஏனென்றால், அந்த வழி சுற்று, அதிக தூரம் இருக்கிறது. கன்னியாகுமரிக்குச் செல்லும் பயணிகள் அதை விரும்பவில்லை. ஆகவே, அந்த வழியை மாற்றி, தூரத்தைக் குறைத்து, குறுகிய பாதையில் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறோம். வேறு பேருந்துகள் எல்லாம் அங்கே நின்று செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. இ. கணேசன்: தலைவரவர்களே, சேலத்திலிருந்து கன்னியாகுமரிக்குப் போகும் பேருந்து, இடப்பாடி அதன் வழியிலே இருப்பதால் அங்கே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெருந்துறையிலேயே நிற்கவில்லை; அப்படி இருக்கும்போது இடப்பாடியில் எப்படி நிற்கும்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, வருகிற பேருந்துகளும் பெருந்துறையில் நிற்கவில்லை என்று கூறப்படுகிறது. அதைப்போல ஈரோட்டிலும் மற்ற இடங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்திலே செல்ல வேண்டுமென்று பேருந்தை நிறுத்தினால் இடம் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். நாங்கள் பேருந்துகளில் செல்ல இலவச அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எங்களுக்கு இருக்கிற பொறுப்பின் காரணமாக பல்வேறு கிராமங்களுக்கு நாங்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப் போவதற்கு பேருந்தை நிறுத்தினால் இடமில்லை என்று சொல்லி விடுகிறார்கள். எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற அனுமதிச் சீட்டிற்கு மரியாதை இல்லாமல் போகிறது. எனவே இந்த வி.ஐ.பி. சீட்டுக்கு உரிய மரியாதை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற அந்த அனுமதிச் சீட்டுக்கு மரியாதை இல்லை; சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் மரியாதை. அரசைப் பொறுத்தவரையில், எல்லா திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இரண்டு இருக்கைகளை காலியாக வைக்க வேண்டுமென்ற ஒரு நிலையை வைத்திருந்தோம். அதன் பிறகு பொதுமக்களிடமிருந்து கருத்துக்களையும், நமக்கு ஏற்பட்ட சூழ்நிலைகளையும்—

அதனால் சுமார் 1 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதையுங்கருத்திற் கொண்டு, அந்த முறையை மாற்றியமைக்கும் வகையில் பேருந்து புறப்படும் இடத்தில் மட்டும் புறப்படும் வரை காலியாக வைத்திருக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால் இடையிலே கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதைக்கூட மாற்றி, வேறு வழிகளிலே ஏதாவது செய்யலாமா என்று ஆலோசனை செய்து வருகிறோம். விரைவிலே நல்ல முடிவு எடுக்கப்படும்.

ஒய்யாலிக்குப்பம் கிராமத்தில் கடல் அரிப்பைத் தடுக்க சுவர் எழுப்பும் திட்டம்.

* வினா எண் 787—திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டத்தில் ஒய்யாலிகுப்பம் கிராமமும் 72 மீனவர் கொட்டகைகளும் கடல் அரிப்பால் அழிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் எழுப்பும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆறு ஆண்டு காலமாக தொடர்ந்து கடல் அரிப்பால் ஏறக்குறைய 72 மீனவர்களின் குடிசைகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து அவர்களைக் காப்பதற்கு வேறு ஏதாவது திட்டம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை கடலில் ஏற்படும் உயரமான அலைகளின் மூலம் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இதுவரை, இக் கடற் பகுதிகளில் 500, மீட்டர் தூரத்திற்குள் மூன்று வரிசைகளாக இருந்த 65 குடிசைகளும் மற்றும் 100-க்கு மேற்பட்ட தென்னை மரங்களும் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பூண்டியிலுள்ள நீரியல் மற்றும் நிலயியல் ஆய்வகம் கடல் அரிப்புத் தடுப்பு முறைகள் பற்றி ஆய்வு செய்து வருகிறது அந்த நிலைய இயக்குநருடன் கலந்து பரிசிலனை செய்த பிறகு அப்பரிசிலனையின் முடிவின் அடிப்படையில் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.